பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

நகர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ீ 06 உ புதன்கிழமை [20-03-1991] UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 113

# பாடசாலைகளுக்கு மாத்திரம் ரூபா 8 கோடிக்கு மேல் சேதம்!

## உத்தேச மதிப்பீடு தரும் தகவல்

— உதயன் அலுவலகச் செய்தியாளர் கா. குமாரதாசன் —

யாழ்ப்பாணம், மார்ச் 20

கடந்த ஆண்டு ஜூன் நடுப்பகுதியில் இருந்து இவ்வருடம் ஜனவரி வரை இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளால், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மட்டும் எட்டுக் கோடி ரூபாவுக்கும் மேலாகச் சேதம் ஏற்பட்டுள்ளது.

மாவட்ட புனர்வாழ்வு இணைப்பு குழுவினர் திரட்டிய உத்தேச சேத மதிப்பீட்டில் இருந்து இந்த விவரம் தெரியவந்திருக்கிறது-

உத்தேச மதிப்பீட்டில் மொத்தம் 73 பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு ஏற்பட்ட சேதங்களின் மொத்தப் பெறுமதி எட்டுக் கோடியே எண்பது லட்சம் ரூபாவாகும்.

பிரஸ்தாப மதிப்பீட்டின் பிரகாரம், யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் 38 பாடசாலைகள் சேதமுற்றுள்ளன. சேதங்களின் பெறுமதி 4 கோடி 40

[3 ஆம் பக்கம் பார்க்க]

# வடபகுதித் தீவுகள் 50 ஆண்டுகளில் கடலில் அமிழ்ந்து போகும் ஆபத்து!

கொழும்பு, மார்ச் 20

கடல் நீர் மட்டம் உயர்ந்து வருவதால்—அடுத்த ஐம்பது ஆண்டுகளில் — வடஇலங்கையில் உள்ள சப்த் தீவுகளும் ஏனைய சின்னஞ்சிறிய தீவுகளும் கடலுக்குள் அமிழ்ந்து விடும்,

மட்டக்களப்பு வாவி இன்னும் உள்ளுக்குள் புகுந்து விடும்.

இப்படி இலங்கைச் சூழல் காங்கிரஸ் எச்சரித்துள்ளது.

''அழகிய கடற்கரைகள் மறைந்து விடும்'' என்ற தலைப்பில் இலங்கைச் சூழல் காங்கிரஸ் வெளியிட்டுள்ள வெளியீடு ஒன்றில் இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இன்னும் ஐம்பது ஆண்டுகளில் எமது நாட்டின் அழகிய கடற்கரைகள் பலவற்றை நாம் இழந்து விடுவோம்.

கடந்த நூறு ஆண்டுகளில் கடல் நீர்மட்டம் 10 முதல் 15 சத மீற்றர் வரை உயர்ந்துள்ளது, அடுத்த முப்பது முதல் ஐம்பது ஆண்டுகளில் இன்னும் 30 முதல் 150 சத மீற்றர் வரை கடல்நீர் மட்டம் உயரும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்திருக்கிறார்கள்.

கடல்நீர் மட்டம் உயர்ந்து கொண்டு வருவதற்கு பூமியின் வெப்பநிலை அதிகரிப்

[3-ஆம் பக்கம் பார்க்க]

## நாடாளுமன்ற பகிஷ்கரிப்பு: எதிர்க்கட்சிகள் கைவிட்டன

கொழும்பு, மார்ச் 20

கடந்த 25 தினங்களாக எதிர்க்கட்சி எம். பிக்கள் நடத்தி வந்த நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பு நேற்றுடன் கைவிடப்பட்டது.

நேற்று நாடாளுமன்றக் கூட்டத்தில் எதிர்க்கட்சி எம். பிக்கள் கலந்து கொண்டனர்.

பெப்ரவரி 21 ஆம் திகதி தொடக்கம் இடம்பெற்று வந்த பகிஷ்கரிப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் அறிக்கை ஒன்றை விடுத்தார்.

பெப்ரவரி 21 இல் நாடா

[3-ஆம் பக்கம் பார்க்க]

## குப்பை கொளுத்தியபோது குண்டு வெடித்துச் சிதறியது!

யாழ்ப்பாணம், மார்ச் 20

குப்பை கொளுத்திய போது அதில் மறைந்து கிடந்த பீரங்கிக் குண்டு பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

வேம்படி மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக உள்ள ''லொக் வூட் ஹவுஸ்'' வளவுப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2 மணி அளவில் இச் சம்பவம் நடந்தது.

பீரங்கிக் குண்டு வெடித்த சமயம் அருகில் பலர் நின்று கொண்டிருந்த போதும் தெய்வாதீனமாக எவரும் காயம் அடையவில்லை. சைக்கிள் ஒன்று மட்டும் சிறு சேதம் அடைந்தது.

இந்தப் பகுதிகளில் ஏற்கனவே கண்டெடுக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த மற்றும் இரு பீரங்கிக் குண்டுகள், இந்த சம்பவத்தை அடுத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மெதடிஸ்த சபையின் முகாமைக் குருவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலமான லொக் வூட் ஹவுஸில் தற்போது பெண்கள் விடுதி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(இ-143)

## முச்சந்தி முரளி



அப்ப குப்பையில் கிடந்த ''குண்டு''மணி போலை...!

## வவுனியாவில் தாக்குதல்; 3 சிப்பாய்கள் மரணம்

### சடலங்கள், ஆயுதங்கள் மீட்பு

வவுனியா, பூந்தோட்டம் காவல் அரணிலிருந்து நேற்று நண்பகல் 12 30 மணியளவில் வெளியேறிய இராணுவத்தினர் மீது காவல் அரணிலிருந்து சுமார் ஐநூறு யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் பலியாகினர். அவர்களது சடலங்களையும் ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

ரி56-1 ரக துப்பாக்கி - 2, மகஸின் - 8, ஐ எம். ரவைகள் - 285 என்பனவே புலிகளினால் மீட்கப்பட்டன. (உ)

## தாண்டிக்குளத்தில் சூடு! பெண் ஆஸ்பத்திரியில்!!

தாண்டிக்குளம் இராணுவத்தினர் நேற்றுக்காலை திடீரென நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் நொச்சிமோட்டையில் நின்ற பெண் ஒருவர் காயமடைந்தார்.

வியாபார நோக்கத்துடன் அங்கு சென்ற முள்ளியவளை, குமுழமுனையைச் சேர்ந்த நவரத்தினம் வசந்தகுமாரி [35 வயது] என்னும் 5 பிள்ளைகளின் தாயே காயமடைந்தவர் ஆவார்.

காயமடைந்த இந்தப் பெண் நேற்று மாலை யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

பலநூற்றுக்கணக்கானவர்கள் அங்கு நின்றபோதே தான் இராணுவத்தினரின் சூட்டுக்கு இலக்கானதாக அந்தப் பெண் தெரிவித்தார்.

தாண்டிக்குளம் 'சென்றி'க்கு அருகில் சிப்பாய் ஒருவர் மிதிவெடியில் சிக்கியதை அடுத்தே வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

(ஓ-15)

## 9 தமிழர் கைது

பாணந்துறையில் வர்த்தக நிலையங்களில் தொழில் பார்த்து வந்த ஒன்பது தமிழ் இளைஞர்கள் பாணந்துறைப் பொலீஸாரால் கைது செய்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## குச்சவெளிப் பகுதியிலும் இரு படையினர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்: மார்ச் 20

நேற்று திருகோணமலை சலப்பையாறு இராணுவ முகாமிலிருந்து குச்சவெளி நோக்கி வந்த இராணுவத்தினர் மீது இரணைக்கேணியில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

அவர்களிடமிருந்து ரி-56 'பட்' ரக துப்பாக்கி - 2, அதற்குரிய மகஸின் -8 ஏ. கே எல். எம். ஜி ரம் மகஸின் - 4, அதற்குரிய ரவையுடன் லிங்க் - 400, ஐ. எம். ரவைகள் - ஆயிரத்து 170 ஆகியவையே புலிகளால் மீட்கப்பட்டன. (உ)

# நிபந்தனையின்றி பேச முன்வந்தால் யாழ்ப்பாணத்திலேயே பேசலாம்!

## புலிகள் பிரமுகர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

வடக்கு-கிழக்கு சண்டையை நிறுத்துவது தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்த இலங்கை அரசின் யோசனையை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உத்தியோக பூர்வமாக நிராகரித்து விட்டது.

இத் தகவலை இந்திய வானொலி நேற்று வெளியிட்டது.

[illegible] டன் சேர்ந்து திரு. பிரபாகரனும் பேச்சுக்களில் கலந்து கொள்ள வேண்டும் என்ற இலங்கை அரசின் யோசனை ஏற்றுக்கொள்ளப்பட முடியாத ஒன்றாகும் என்று பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் வைத்து விடுதலைப் புலிகள் மத்திய செயற்குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார் என்றும் இந்திய வானொலி அறிவித்தது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக திரு. பிரபாகரன் எந்த அமைதிப் பேச்சுக்களிலும் கலந்து கொள்ள முடியாது என்றும் அந்தப் பேச்சாளர் சொன்னார்.

இதே வேளை—

ஸ்ரீலங்கா அரசு நிபந்தனை ஏதுமின்றி அமைதிப் பேச்சுக்கள் நடத்த முன் வந்தாலும்கூட, அது யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்பட வேண்டும்; கொழும்பில் நடத்தப் படக் கூடாது.

[3-ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பாவித்த ஸ்ப்ரே, ஒடிக்கலோன், Gum [கம்] Vicks போத்தல், பவுடர் டப்பா, பேனைப்பொயின்ட் பேனா சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் 12 மணி வரை வாங்கப்படும். S. சத்தியன் 55, மணிக்கூண்டு வீதி, கொழும்பு ஸ்ரூடியோ பின்புறம், யாழ்ப்பாணம்.

[இ-5867]

### மணமகள் தேவை

லண்டனில் கணக்கியல் கற்கும் யாழ் இந்து 31 வயதுடைய செவ்வாய் தோசமற்ற மணமகனுக்கு அழகிய 26 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. நட்சத்திரம் மிருகசீரிடம் பிறப்பு எண் 2, 4, 6, ஆகவும் A/L படித்தவராகவும் [லண்டனில் உள்ளவர்களும்] எல்லா விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 194. C/o உதயன், யாழ்ப்பாணம்.

[16150]

### ரைப்ரைட்டர்கள்

Typewriters:- தமிழ் - ஆங்கிலம் வாங்கவும், விற்கவும். சிறந்த முறையில் திருத்தவும், எல்லாவித தட்டச்சு இயந்திரங்கள், உதிரிப்பாகங்களுக்கும் FUDO: 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [பஸ் நிலையம் முன்பாக]

[இ-5835]

### கலர்ப்பிலிம் பிறிண்டிங்

கலர்ப் பிலிம் சுருள்கள் விரைவாகவும், குறைந்த செலவிலும் பிறிண்டிங் செய்து தரப்படும். Quick Photo மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம், கே. கே. எஸ் வீதி, தெல்லிப்பழை.

[16109]

### A/L பொருளியல்

A/L 91, 92, வகுப்புக்கள் செவ்வாய், வியாழன் 4Pm. ஆசிரியர் எஸ். சரவணபவான் B. A. [Hons] Fan Institute, கண்டத்தரிப்பு. [16110]

### குவைத்தில் இலங்கைத் தூதரகம்

கொழும்பு, மார்ச் 20

குவைத்தில் இலங்கைத் தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

வளைகுடா போரின் பின்னர் குவைத்தில் தனது தூதரகத்தைத் திறக்கும் முதலாவது ஆசிய நாடு இலங்கையாகும் [-எ]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் வல்லிபுரம் நல்லம்மா

தோற்றம்: 10 - 08 1920

மறைவு: 18 - 02 - 1991

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தில் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை எல்லாம் வழிகாட்டியதுடன் திடீரென எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்புச் சகோதரி, பிள்ளைகள், மருமக்கள், பேரன்.

இலகடி, சங்கானை. [3886]

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[O/L வகுப்புக்களிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

# O/L

துரிதமீட்டல் வினா - விடை வகுப்புக்கள்

## DAY CLASSES

[8-30 — 1-30]

ஆரம்பம்: 20 - 03 - 1991 (இன்று)

## SAT. & SUN. CLASSES

[8-00 — 2-00]

ஆரம்பம்: 23 - 03 - 1991

மு. குறிப்பு: i எமது அனுபவமும், தனித்துவமும் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படும்

ii இம் முறையும் பயிற்சிப்பரீட்சையும் நடத்தப்படும். [இ-5863]

---

## தையல்காரர்கள் தேவை

ரெடிமேட் ஆடைகள் தைக்கும் நிலையம் ஒன்றுக்கு பெண்களின் உடைகளைச் சிறந்த முறையில் தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்த பெண் தையல்காரர்கள் உடனடியாகத் தேவை நேரில் தொடர்பு கொள்ளவும்.

சி. இராசரத்தினம்,
டாக்டர் செல்லத்துரை வீதி,
[கேணியடி அருகாமையில்]
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

[16151]

---

உ

அம்பாள் துணை

அளவெட்டி - வடக்கு

தவளக்கிரி முத்துமாரியம்மன் கோவில்

## வருடாந்த பெருங்குளிர்த்தி விழா

அம்பாள் அடியார்களே!

மேற்படி குளிர்த்தி விழா நிகழும் பிரமோதூத ஆண்டு பங்குனி மாதம் 11 ஆம் திகதி (25-03-1991) திங்கட்கிழமை பகல் வழமைபோல் நடைபெறும். அம்பிகை அடியார்கள் அனைவரும் இக்குளிர்த்தி விழாவில் பங்குபற்றி அன்னையின் அருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்:

மேற்படி ஆலய பரிபாலன சபையினர்.

[15916]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 10 — 6 — 1903

உதிர்வு: 18 — 2 — 1991

அமரர்

### சின்னத்தம்பி வேலுப்பிள்ளை

[ஏழாலை மேற்கு, சுன்னாகம்]

என்றும் உங்கள் அன்பையும், செயல்களையும் என்றென்றும் மறவோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

மரணச் சடங்கில் பங்குபற்றியோருக்கும், உதவிகள் பல செய்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
மக்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

[16128]

---

## ★ திருமண அழைப்பு ★

நிகழும் பிரமோதூத வருடம் பங்குனி மாதம் 8ஆம் திகதி [22-03-91] வெள்ளிக்கிழமை மு. ப 9-30 மணி முதல் — 10-42 மணி வரை வரும்

★ சுப முகூர்த்தத்தில ★

மணமகன்: செல்வன் **சீ. சுகுமாரனுக்கும்**

மணமகள்: செல்வி **சி. சாந்தினிக்கும்**

கலட்டி அம்மன் ஆலய மண்டபத்தில் திருமணம் செய்ய பெரியோர் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்கள்: சிவானந்தம் தம்பதிகள்
உதயகுமாரன் தம்பதிகள் [கண்ணன்]

★ தங்கள் நல்வரவை விரும்பும்: ★

திரு. திருமதி க. சிவரத்தினம்,
"குற்றாலம்"
77/58, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு. நா. சிவஞானமும்,
பிள்ளைகளும்,
83, இராமநாதன் வீதி
யாழ்ப்பாணம்.

★ இரு வீட்டார் அழைப்பு ★ [3883]

---

## விண்ணக வாழ்வில் ஓராண்டு பூர்த்தி



தோற்றம்: 18 12 - 1944

மறைவு: 20 - 03 1990

திதி: 08 - 04 - 1991

### அமரர் பத்தினிப்பிள்ளை சிவசம்பு

[குமாரசாமி]

எங்கள் மனத்திலின் அழியாத ஓவியமாய் கனவிலும் கலையாத காவியமாய், அன்பாலே எம்மை எல்லாம் மூழ்கடித்த பத்மாவே! இன்றோடு நீர் பிரிந்து ஓராண்டு ஆனாலும் எம் கண்ணோடு வழிகின்ற நீர் மட்டும் மாறவில்லை உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்:

குடும்பத்தினர்.

கல்லூரி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி

[16145]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நற்பணி வெல்க!

ஆறாம் ஆண்டு மாணவர்களுக்குரிய வரலாறு நூல், சிங்கள–பௌத்த ஓினதேசியவாதத்தை நிலைநாட்டி, அதனைத் தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் திணிக்கும் முயற்சியாக அமைந்துள்ளது. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் இது விடயத்தைத் தக்கபடி, உரிய நேரத்தில் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது.

இலங்கை ஒரு சிங்கள–பௌத்த நாடு என்பதை நிலைநாட்டவும், அதற்கு வகை செய்யும் விதத்தில் வெளி உலகத்துக்கு அவ்வாறே காட்டிக் கொள்ளவும், ஆங்கிலேயரிடம் இருந்து விடுதலை பெற்ற நாள் முதல் பேரினவாதிகள் முயன்று வருகிறார்கள். அதற்கு இசைந்த அரசியல் – ஆட்சி-கட்டமைப்பையும் உருவாக்கிவிட வேண்டும் என்பது அவர்களின் நோக்கம்.

அந்த நோக்கத்தை எய்துவதற்காக, நாட்டின் அரசியலை நாசம் செய்தது மட்டும் அன்றி, வரலாற்றையும் தமது எண்ணத்துக்கு ஏற்ப திரிபு செய்யும் முயற்சியில் சிங்கள–பௌத்த பேரினவாதம் தீவிர நடவடிக்கைகளை இடைவிடாது தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரிலும், வரலாறு என்ற பெயரிலும் பன்முகப்பட்ட வழிகளில் அந்தரங்கமாகவும், அம்பலத்திலும் அவர்கள் இந்த ஈனச் செயலில் ஈடுபட்டு வருகிறார்கள். பாடப் புத்தகங்கள் மூலம், வரலாற்றைத் திரித்து எதிர்காலப் பரம்பரையின மாணவர் மனத்தை பேரினவாத நஞ்சினால் நிறைப்பதும் அதற்கான நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

சிங்கள மாணவர்கள் மத்தியில் இனத்துவேசத்தை விதைக்கும் விதத்தில் அமைந்த பாடநூல் எழுத ஆரம்பித்து, இப்போது தமிழ் மாணவருக்குத் தவறான வரலாறைப் புகட்டும் சூழ்ச்சியாகவும் மெது மெதுவாகத் தலையெடுத்து வருகிறது.

ஆறாம் ஆண்டுக்குரிய வரலாறு பாடநூல், மகாவம்சத்தில் சிங்கள இனத்தையும், பௌத்த மதத்தையும் முதன்மைப்படுத்தி இயற்றப்பட்ட கட்டுக்கதைகளை வைத்தே முற்று முழுதாக எழுதப்பட்டு இருக்கிறது. தமிழர்களின் உண்மையான வரலாற்றை தமிழ் மாணவர்களுக்கு மூடி மறைக்கும் அப்பட்டமான அறிவியற் கொடுமை இது. அறிவியற் கொலை என்றும் சொல்லலாம். தமிழர்களையும், முஸ்லிம்களையும் இரண்டாந்தரப் பிரசைகளாகக் காட்டும் அபத்தம்.

இலவசப் பாடப்புத்தகம், அரசாங்கப் பா விதானம், ஆலோசனைக்குழு, பதிப்பாசிரியர் குழு என்ற போர்வைகளில் இந்த வரலாற்று, அறிவியற் கொலைகள் நடத்தப்படுகின்றன. இதற்குத் தமிழ்க் கல்விமான்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் உடந்தையாக இருத்தல் ஆகாது.

சம்பந்தப்பட்ட பாடநூலை மாணவர்களிடம் இருந்து உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். புதிய பாடநூல் ஒன்றை தமிழ்க் கல்விமான்களே எழுதி அதனைத் தமிழ் மாணவருக்குப் பயிற்றுவிக்க வேண்டும்.

இந்த முயற்சியில் யாழ். பல்கலைக்கழகக் கல்விமான்களும், வரலாற்று ஆசிரியர்களும் இப்போது ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம், மகிழ்ச்சிக்குரியது. அவர்களின் நற்பணி வெல்வதாக.

## யானைகளின் தொல்லை

யாழ்ப்பாணம், மார்ச் 20

கிளிநொச்சிக் காட்டுப் பகுதியில் மீண்டும் யானைகளின் தொல்லை அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புளியம் பொக்கணை, கண்டாவளை, பிரமந்தன் ஆறு ஆகிய பகுதிகளிலேயே யானைகள் அட்டகாசம் செய்து வருகின்றன.

இப்பகுதிகளில் பத்து நெற்போர்களும் சுமார் 40 வீடுகளும் யானைகளினால் சேதப்படுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. [உ]

## மாணவர் ஒன்று கூடல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

விடுதலைப் புலிகள் இயக்க வலிகாமம் பிரிவு மாணவ உறுப்பினர்களுக்கான ஒன்று கூடல் இன்று மாலை 4 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். [ஒ]

# இலங்கைப் பிரச்சினை குறித்து ஆஸி. தொடர்ந்து குரல் கொடுக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 20

ஸ்ரீலங்காவில் நடக்கும் இரத்தக் களரி, வன்செயல்கள் குறித்து ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. அவற்றை நிறுத்த வேண்டும் என்பதில் நாம் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறோம்.

வன்செயல்களை நிறுத்தி சமரச வழிகளைக் கையாளுமாறு, சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் ஸ்ரீலங்கா அரசாங்கத்தையும் ஏனைய தரப்பாரையும் ஆஸ்திரேலிய அரசு கேட்டுள்ளது.

ஸ்ரீலங்காவில் நடக்கும் இரத்தக் களரியை நிறுத்துமாறு கோரி தொடர்ந்து இனி மேலும் எங்கள் அரசாங்கம் சர்வதேச அரங்குகளிலும், ஸ்ரீலங்கா அரசிடம் நேரடியாகவும் வலியுறுத்திக் கொண்டே இருக்கும்.

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. இவான்ஸ் சார்பில் அமைச்சின் தென்னாசியா, ஆபிரிக்கா மத்திய கிழக்குப் பிரிவின் உதவிச் செயலாளர் திரு. ரோஸ் பேர்ணஸ், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

திரு. ஸ்ரீபாஸ்கரன், ஆஸ்திரேலியப் பிரதமர் பொப் ஹோக்குக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலளிக்கும் விதத்திலேயே திரு. பேர்ணஸின் கடிதம் அமைந்துள்ளது.

ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவதும், மனக் குமுறலையும், கவலையையும் தரும் ஒரு விவகாரமாகும். கடந்த செப்டம்பர் மாதத்தில் சர்வதேச மன்னிப்புச் சபையும், நவம்பரில் ஐரோப்பிய மனித உரிமைகள் குழுவும் ஸ்ரீலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து கடும் கண்டன அறிக்கைகளை வெளியிட்டுள்ளன—

ஸ்ரீலங்காவில் நிரந்தர அம்சமாகிவிட்ட மனித உரிமை மீறல்களையும் எமது அரசு குறித்துக் கொண்டுள்ளது — என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [அ]

# விமானத் தாக்குதல்களை உடன் நிறுத்தக் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 20

வடக்கு - கிழக்குப் பகுதியில் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் விமானத் தாக்குதல்களை ஸ்ரீலங்கா அரசாங்கம் உடனடியாக நிறுத்திவிட்டு, அமைதிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நவசமசமாஜக் கட்சி கோரியுள்ளது.

பிரதமரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான திரு. டி பி விஜேதுங்காவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் இக்கோரிக்கையை நவசமசமாஜக்கட்சி விடுத்துள்ளது.

கடந்த ஜனவரி 15 ஆம் திகதி முதல் வடபகுதியில் விமானத் தாக்குதல்களினால் நூற்றுக்கணக்கான பொது மக்கள் பலியாகி உள்ளனர். விமானத் தாக்குதல்களினால் ஏராளமான பொது மக்கள் காயமடைந்துள்ளனர். உடைமைகள் சேதமடைந்துள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்குள்ளானோர் அனைவருமே ஒன்றுமறியாத அப்பாவிகளே.

காலந்தாழ்த்தாது உடனடியாக அமைதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாண மக்களுக்குத் தேவையான உணவு, மருந்து வகைகளில் மூன்றில் ஒரு பங்குதானும் அங்கு அனுப்பப்படவில்லை.

—இவ்வாறு நவசமசமாஜக் கட்சி தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளது. [உ-எ]

## 9 தமிழர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யப்பட்டனர்.

மட்டக்களப்பு மற்றும் அக்கரைப்பற்று பகுதிகளைச் சேர்ந்த அந்த இளைஞர்கள் அனைவரும் பாணந்துறை நீதிவானின் உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். [உ-எ]

## நாடாளுமன்ற...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ளுமன்றத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை நடத்துவதாக சபாநாயகர் எம்.எச் முகமது அளித்த உறுதிமொழியைத் தொடர்ந்தே பகிஷ்கரிப்பை எதிர்க்கட்சிகள் கைவிட்டன.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த எதிர்க்கட்சியின் கூட்டத்தில் நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிடுவதென முடிவு செய்யப்பட்டிருந்தது [ஒ-எ]

## நிபந்தனையின்றி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

—இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உள்ளூர் தலைவர் ஒருவர் தெரிவித்தார் என்று, தனது செய்தியாளரை ஆதாரம் காட்டி இந்திய வானொலி நேற்று அறிவித்தது [ஒ-எ]

## வடபகுதித்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பதுதான் காரணம்.

பூமியின் சராசரி வெப்பநிலை 15 பாகை செல்சியஸ். அடுத்த 30 முதல் 50 ஆண்டுகளில் பூமியின் வெப்பநிலை 1.5 முதல் 4.5 பாகையால் உயரலாம் என்பது விஞ்ஞானிகளின் மதிப்பீடு என்று அந்த வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஒ-எ]

## பாடசாலைகளுக்கு...

லட்சம் ரூபாவாகும்.

அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம், யாழ். சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு அதிக சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக மதிப்பீடு தெரிவிக்கிறது.

இதேவேளை—

வலி. வடக்கு, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் சேதங்களும் கடந்த ஜனவரிக்கு பின் வல்வைப் பகுதியிலும் ஏனைய இடங்களிலும் விமானத் தாக்குதல்களால் பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதங்களும் இந்த மதிப்பீட்டில் அடங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த மேற்படி பாடசாலைகளில் பெரும் பாலானவை முன்னரும் சேதமுற்றவையாகும். அவை பின்னர் 1988—90 காலப்பகுதியில் வெளிநாட்டு நிறுவனங்களின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தன.

ஆசிய அபிவிருத்தி வங்கி, நோறாட் ஸ்தாபனம் மற்றும் கனேடிய உதவி நிறுவனம் என்பவற்றின் நிதியைக் கொண்டே அந்தப் பாட[illegible] [அ-5]

# பல்கலைக்கழக அனுமதி; யாழ்.மாவட்ட வெட்டுப்புள்ளி

யாழ்ப்பாணம், மார்ச் 20

1989 ஆகஸ்டில் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை 1990—91 கல்வியாண்டில் பல்கலைக்கழகத்தில் அனுமதிப்பதற்கான புதிய வெட்டுப் புள்ளி (Cut-out Marks) விவரங்கள் பல்கலைக் கழக மானி ஆணைக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ளன.

புதிய கல்வியாண்டில் 30 வீதம் கூடுதலான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது என முடிவு செய்யப்பட்டதை அடுத்து புதிய வெட்டுப் புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

மேலதிகமாக மாணவர்களைச் சேர்ப்பது என்ற முடிவு குறித்தும், இந்த முடிவினால் வெட்டுப்புள்ளி நிலை குறைக்கப்படும் என்றும் ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்தவையே.

இவ்வாறு குறைக்கப்பட்ட வெட்டுப் புள்ளி விவரங்களே தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கான குறைக்கப்பட்ட வெட்டுப் புள்ளி விபரம் வருமாறு:-

| பிரிவு | வெட்டுப் புள்ளி பழையது | — புதியது |
|---|---|---|
| மருத்துவம் | 288 | 273 |
| பல் வைத்தியம் | 284 | 272 |
| மிருக வைத்தியம் | 280 | 267 |
| விவசாயம் | 268 | 254 |
| உயிரியல் விஞ்ஞானம் | 257 | 242 |
| பொறியியல் I | 282 | 272 |
| பொறியியல் II | 274 | 259 |
| பௌதிகவிஞ்ஞானம் | 232 | 208 |
| முகாமைத்துவம் | 277 | 270 |
| வர்த்தகம் | 263 | 253 |
| சட்டம் | | 251 |
| கலை | 248 | 236 |

[உ-5]

# இந்தியா செல்ல இனிமேல் ஆயிரம் டொலர் செலாவணி

கொழும்பு, மார்ச் 20

நாணய மாற்றுக் கட்டுப்பாட்டு நடைமுறைகளில் இன்று தொடக்கம் பல புதிய மாற்றங்கள் அமுலுக்கு வருகின்றன.

அவற்றை மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் எச், என். கருணதிலக்கா நேற்று வெளியிட்டார்.

அவற்றில் முக்கியமானவை சில வருமாறு:-

★ வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரும் பணத்துக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

- அதாவது எவ்வளவு பணத்தையும் கொண்டு வரலாம். ஆனால் அதனை அதிகாரிகளுக்கு அறியப்படுத்த வேண்டும்.

★ இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை விடுமுறையைக் கழிக்க வழங்கப்பட்ட அடிப்படை நாணய ஒதுக்கீடு இனி வருடாந்தம் வழங்கப்படும்.

★ இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கு யாத்திரை செல்வோருக்கு வருடாந்தம் ஆயிரம் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி வழங்கப்படும்.

- இப்போது 2 வருடங்களுக்கு ஒரு முறை 400 அமெரிக்க டொலர்களே நாணய மாற்றாக அனுமதிக்கப்படுகிறது.

இதேவேளையில் வெளிநாட்டு நாணமாற்றுப் பணியில்ஈடுபட அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை நியமிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. [அ எ]

# பஸ்ரா நகர வீதிகளில் 5 ஆயிரம் சடலங்கள்!

வாஷிங்டன், மார்ச் 20

ஜனாதிபதி சதாமின் அரசுப் படைகள் நடத்திய கடும் தாக்குதலில் உயிரிழந்த சுமார் 5 ஆயிரத்துக்கு அதிகமான பொதுமக்களின் சடலங்கள் பஸ்ரா நகர் வீதிகளில் காணப்படுகின்றன என்று ஈரானிய செய்தி ஸ்தாபனம் அறிவித்தது

இதற்கிடையில்—

ஈராக்கின் வடக்குப் பகுதியில் எண்ணெய் வயல்கள் உள்ள நகர் ஒன்றை குர்டிஷ் இனப் போராளிகள் கைப்பற்றியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது

குர்டிஷ் விடுதலை இயக்கம் வெளியிட்ட தகவலின்படி, ஈராக் நாட்டின் எண்ணெய் வளத்தின் நான்கில் ஒரு பங்கு அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. [உ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலத்த காவலின் மத்தியில் நேற்று நீதிமன்றில் எர்ஷாத்

பங்களாதேஷின் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் எர்ஷாத் மீதான ஊழல் மற்றும் சட்ட விரோதமான முறையில் ஆயுதங்களை வைத்திருந்தது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று டாக்காவில் ஆரம்பமானது.

கடந்த டிசம்பர் 12 ஆம் திகதி முதல் சிறையில் வைக்கப்பட்டுள்ள ஜெனரல் எர்ஷாத் பலத்த காவலுக்கு மத்தியில் விசேட நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இவ்வழக்கில் குற்றவாளியாகக் காணப்படின் ஆயுட் சிறைத்தண்டனை அவருக்கு வழங்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஓ-எ]


யாழ். மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்க

## பொதுக் கூட்டம்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பேக்கறி உரிமையாளர்களும் 21-3-91 மாலை 4.30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறும் [St. Johns College] பொதுக் கூட்டத்திற்கு தவறாது சமூகம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதனை முக்கிய அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இப்படிக்கு
காரியதரிசி.

[16155]



யாழ் இந்துக் கல்லூரி பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

யாழ். இந்துக்கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டம் 2 - 4 - 91 செவ்வாய்க் கிழமை பி. ப. 3 - 00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு. க. சி. குகதாசன் தலைமையில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரவும்.

உறுப்புரிமையை உறுதிப்படுத்த 1991 ஆம் ஆண்டுச் சந்தா செலுத்திய பற்றுச்சீட்டைத் தவறாது எடுத்து வருமாறு வேண்டப்படுகின்றனர்.

கல்லூரி அபிவிருத்தி தொடர்பான பிரேரணைகள் 25 - 3 - 91 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

க. சி. குகதாசன்
தலைவர்/அதிபர்

க. பூபாலசிங்கம்,
செயலர்.

[சி/5859]



ஆசிரியர்களுக்கும் பட்டதாரிகளுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்

## S. L. E. A. S.

(இலங்கைக் கல்வி நிருவாக சேவை Open - Ltd.)

III ஆம் தரத்திற்கு
நடைபெறவிருக்கும் போட்டிப் பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

[பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை]

**ஆரம்பம்: 23-03-91 (10 a m)**

பாடநெறி:
1. இரங்கல்
2. நுண்ணறிவுத்தேர்வு
3. விடய ஆய்வு

தகைமைகள்:-
- ★ ஆசிரியர்களும், ஆசிரியரல்லாத பட்டதாரிகளும் [22 — 30 வயதிற்குட்பட்ட] விண்ணப்பிக்கலாம்.
- ★ ஆசிரியர்களாயின் 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25—03—91**

பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களையும்,
விவரத்திரட்டினையும்
எம்மிடம் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

- ★ விரிவுரைகள் சனி, ஞாயிறு, விடுமுறை தினங்களில்.
- ★ இலவச பாடக்குறிப்புகள்.
- ★ தொடர்ச்சியாக 3 மணித்தியாலங்கள்.
- ★ கட்டணம் ரூபா 280.00 (முழுப்பயிற்சிக்கும்)

விவரங்களுக்கு:
நேரில் மு. ப. 9-00 —12 மணி வரை

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD,
JAFFNA.
[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

[சி-5866]


## மேஜர் ராஜித் வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் தாளவான்பிட்டியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் காயமுற்ற விடுதலைப் புலிகளின் வாகரைப் பிரதேசப் பொறுப்பாளர் மேஜர் ராஜித் [செ. கணேசன் — சித்தாண்டி] அன்று நள்ளிரவு வீரமரணமடைந்தார். [உ]

## பங்களாதேஷ் பிரதமராக காலிதா ஸியா

டாக்கா, மார்ச் 20

முன்னாள் ஜனாதிபதி ஸியா- உர்- ரஹ்மானின் துணைவியாரான பேகம் காலிதா ஸியா இன்று பங்களாதேஷின் முதல் பெண் பிரதமராகப் பதவி ஏற்கிறார். [ஓ-எ]

## இன்று முதல் போலியோ மருந்து

யாழ்ப்பாணம் மார்ச் 20

யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் தாய் சேய் நலப் பிரிவில் இன்று முதல் போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## மக்கள் வங்கிக்கு பணம்வரவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 20

இவ்வாரத்தில் மக்கள் வங்கிக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்பட்ட பணம் வரவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் யாழ். அரச அதிபரும் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரும் வங்கித் தலைவருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ''குமண'' கப்பல் மூலம் 3 கோடி 50 லட்சம் ரூபா பணமாகக் கொண்டுவரப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது முல்லைத்தீவில் நிற்கும் குமணவில் யாழ்ப்பாண மக்கள் வங்கிக்குப் பணம் வந்து சேரவில்லை என்று வங்கி வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. [அ-3]


30 ஆம் ஆண்டு
நினைவஞ்சலி



எம் எஸ். இம்மனுவேல்
[முன்னாள் கல்விப் பரிசோதகர்]

20-03-1991

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, பிள்ளைகள்.


# முத்தமிழ் விழா ஏற்பாடுகள் பூர்த்தி

எதிர்வரும் ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை யாழ் குடா நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினால் நடத்தப்படவிருக்கும் முத்தமிழ் விழாவுக்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இயல், இசை, நாடகம் என முத்தமிழையும் எடுத்தியம்பும் அரங்குகள் இவ்விழாவில் இடம்பெறும். விழாவையொட்டி சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவிருக்கிறது.

விடுதலைப் புலிகளினால் பிரகடனப்படுத்தப்படும் தமிழ் தேசிய விருதும் இந்த விழாவில் வைத்தே உரியவர்களுக்கு வழங்கப்படும்.

## ரூ. 2 லட்சம் பெறுமதியான கொப்பிகள் யாழ். வரும்

### கல்வி அலுவலகம் நடவடிக்கை

பாடசாலை மாணவர்களுக்காக சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான கொப்பிகளை கொழும்பில் இருந்து இங்கு எடுத்துவர யாழ் கல்வி அலுவலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஐக்கிய ராஜ்ஜிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்படி கொப்பிகளை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கு உதவவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை கொப்பிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது

இக் கொப்பிகள்—கோட்டக்கல்வி அலுவலகங்கள் மூலமாக— மாணவர்களுக்கு மலிவு விலையில் விநியோகிக்கப்படும் என்று கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். [ஒ-5]

## புளொட் உறுப்பினர்கள் கால் இழந்தனர்

யாழ்ப்பாணம், மார்ச் 20

நேற்றுக் காலை 7-20 மணியளவில் தாண்டிக்குளம் இராணுவ காவல் அரணிலிருந்து 75 யார் தூரந்துக்கு முன்நோக்கி வந்த ''புளொட்'' இயக்க உறுப்பினர்கள் இருவர் இரண்டு மிதி வெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்தனர். என்று தெரிவிக்கப்படுகிறது. [உ]


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சடையன் கற்பகம்

ஊர்காவற்றுறை கிழக்கைச் சேர்ந்த திருமதி சடையன் கற்பகம் 18 - 3 - 91 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற இளையவன் சடையனின் அன்பு மனைவியும், செல்லம்மா, நாகராசா, சதாசிவம், நாகலிங்கம், மாணிக்கம், செல்லையா, புனிதம், கந்தையா, தர்மதேவன் ஆகியோரின் அன்புத் தாயாரும், பசுபதி, பூபதி, கோமதி, சரஸ்வதி, சாந்தாதேவி, மகாதேவி, அரியபுத்திரன், சாந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 20 - 3 - 91 புதன் கிழமை காலை 8 மணிக்கு சரவணை 2 ஆம் வட்டாரத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சரவணை மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
ச. நாகராசா [மகன்]

ஊர்காவற்றுறை கிழக்கு,
1 ஆம் வட்டாரம்,
ஊர்காவற்றுறை.

[14929]

### திருமதி நாகலிங்கம் செல்லம்மா

கந்தர்மடத்தைச் சேர்ந்த திருமதி நா. செல்லம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் [பெற்றோலியக் கூட்டுத்தாபனம்] அவர்களின் மனைவியும், இராசலக்சுமி, கனகரட்ணம் [கிளிநொச்சி/யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்], குணபூசணி, சுந்தரலிங்கம் [ஆசிரியர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி] ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி, கணேசபிள்ளை [வர்த்தகர்], தயாநிதி, கனகலக்சுமி [ஆசிரியை, யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை] ஆகியோரின் மாமியாரும், காயத்திரி, திவாகரன், சயந்தி, சுஜனன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், காலஞ்சென்ற நாகராசா அவர்களின் அன்புச் சகோதரியுமாவார்

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 20-03-1991 [இன்று] புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

31, குமாரசாமி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[15921]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 03 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org